2003 ஏப்ரல் 23]

293—

தொழிற்பேட்டை.

•27622—திரு. கே.எஸ். பழனிசாமி:

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் தொழிற்சாலைகள் சரிவர ஆரம்பிக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கடன் உதவி வழங்கி, தொழிற்சாலைகள் விரைவில் தொடங்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் 64 தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 20 தொழிற்சாலைகளில் ஏற்கெனவே முழு அளவில் உற்பத்தி தொடங்கி செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 44 தொழிற்சாலைகளில், உற்பத்திக்குத் தேவையான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திரு. கே.எஸ். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைத் தொழில் துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக கொண்டுவர தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுத்துவரும் இந்த நல்ல சூழ்நிலையில் 2,800 ஏக்கர் நிலப்பரப்பில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சிறப்பான உள் கட்டமைப்பு வசதிகளுடன் சேலம், கோவை தேசிய நெடுஞ்சாலை 47-ல் அமைந்துள்ள பெருந்துறை சிப்காட் வளாகத்தில் துணி சாயம் இடுதல் மற்றும் தோல் தொழிற்சாலைகளின் தொழில் முனைவோர்களைக் கொண்டு வந்து தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கும்பொழுது, மாவட்டத்தில் நிலத்தடி நீர் மாசுபடுவதை முற்றிலும் தடுக்க முடியும். மேலும் பெருந்துறை பகுதி அதிகமான பொறியியல் கல்லூரிகளைக் கொண்டுள்ளதால், படித்த இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பெருந்துறை சிப்காட்

வளாகத்தில், சென்னையில் உள்ளதுபோல டைடல் பார்க் தொடங்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். பழனிசாமி.

திரு. கே.எஸ். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மஞ்சள் வணிக வளாகத்திற்கு 10 ஏக்கர் நிலம் பெருந்துறை சிப்காட்டில் ஒதுக்கப்பட்டு பத்திரமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 40 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ள இந்த மஞ்சள் வணிக வளாகத்தை பெருந்துறை சிப்காட்டில் இந்த நிதியாண்டிலே அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன் வருமா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு முயற்சிகளை மேற்கொண்டு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. முருகவேல் ராஜன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி, காஞ்சிபுரம் முக்கிய சாலையிலே, மாங்கால் கூட்டுரோடு என்கிற இடத்தில் வந்தவாசி, செய்யார் தொகுதியில் பயன்படுகின்ற வகையில் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு 1991-96-லே அப்பொழுது ஆட்சியிலே இருந்த அ.இ.அ.தி.மு.க. அரசு அதற்கான முயற்சியை எடுத்துக்கொண்டது. அது அப்படியே கிடப்பில் போடப்பட்டு, எந்தவிதப் பயனும் இல்லாமல் நிலம் ஆர்ஜிதம் செய்து அப்படியே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முருகவேல் ராஜன், தனிக் கேள்விதான் போடவேண்டும். இது ஈரோடு மாவட்டம், பெருந்துறையைப் பற்றியது.

வினா எண் 294, திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.